மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, உதவி பெறு கின்றவர்கள் ஏறத்தாழ 7 கேட்டகிரிகள் நாம் வைத்திருக்கிறோம். அதிலே கிராஜுவேட்சும், போஸ்ட் கிராஜுவேட்சும் அடங்குகிறார்கள். இவர்களைத் தவிர 'குவாலிபைடு செகண்டரி கிரேடு டீச்சர்ஸ்' 'ஹையர்கிரேடு டீச்சர்ஸ், 'குவாலிபைடு பிசினஸ் எஜுகேஷன் டீச்சர்ஸ், மற்றும் தமிழ் படித்திருக்கக் கூடிய தமிழ்ப் பண்டிதர்கள்', 'குவாலிபைடு கிராஃப்ட் இன்ஸ்ட்ரக்டர்ஸ்', 'டிப்ளமா ஹோல்டர்ஸ் இன் இன்ஜினியரிங்'—என்று ஏழு விதமான கேட்டிகரியை வைத்திருக்கிறோம். பணிவாய்ப்பு அளிப்பதைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கக்கூடிய திட்டம் எதுவும் வைத் திருக்கவில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, மணமான பெண் களுக்கும் இந்த உதவி தரப்படுகிறது. அவர்களுக்கு மணமானவுடன் ஒரு கணவருடைய பாதுகாப்பு கிடைத்து விடுகிறது. அப்பேர்ப்பட்டவர் களுக்குக் கொடுக்கப்பட்ட உதவியை வேறு மணமாகாத பெண்களுக்குத் தருகிற வகையில் மாற்ற முடியுமா? அல்லது அல்லலுறுகிற ஆண்களுக்கு அதிகம் தருகின்ற எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட விவரங்கள் இதுவரை அரசுக்கு வரவில்லை. வருமேயானால் அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும்.

நிலச் சொந்தக்காரர்களுக்கு கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கான மதிப்புத் தொகை வழங்கப்படாமை.

*** 116 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி நகராட்சியில் அரிசனங் களுக்கு இலவச நிலப்பட்டா வழங்கும் பொருட்டு, கடந்த 1981-ம் வருடம், தூத்துக்குடி நகராட்சியில் கையகப்படுத்திய நிலங்களுக்குரிய நிலச் சொந்தக் காரர்களுக்கு, 12—3—1983-ம் நாள் வரையிலும், அந்நிலத்திற்குரிய மதிப்புத் தொகை கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அத்தொகையினை விரைவில் வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

[1984 மார்ச் 26]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்க மீளவிட்டான் கிராமத்தில் 14.56 ஏக்கர் புஞ்சை நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. இதற்கான மொத்த நட்ட ஈட்டுத் தொகையான ரூ. 2,51,160-ஐ நிலச் சொந்தக்காரர்களான ஐந்து பேருக்கு முதல் தவணையாக 1981-ம் வருடம் மார்ச் மாதம் ரூ. 1,25,580-ம் பாக்கி ரூ. 1,25,580-ம் அதற்கான வட்டித் தொகை ரூ. 7,534.75-ம் ஆக மொத்தம் ரூ. 1,33,114-75-ஐ இரண்டாவது தவணையாக, 1982-ம் வருடம் மே மாதத்திலும் கொடுக்கப்பட்டு விட்டது.

(இ) மற்றும் (உ): மேற்கொண்டு நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகை எதுவும் பாக்கி இல்லை.

(முற்பகல் 10-40)

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, நிலச் சொந்தக்காரர்கள் 5 பேருக்கு இப்போது பணம் பட்டுவாடா செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் தூத்துக்குடி தனித் தாசில்தாரின் 15/77/76 ஆணைப்படி 6 பேர்களிடம் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது அந்த 6 பேர்களிலே ஒருவருக்குக் கொடுக்கப்படவில்லை. மறைந்த ஜோசப் பாண்டியன் மனைவி திருமதி செல்லமணி என்பவர் மனுச் செய்தும், அவருக்கு இதுவரை பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை, தரப்பட்டுள்ள புள்ளிவிவரப்படி ஆறு பேர்களிடம் நிலம் ஏற்கப்பட்டு, 5 பேருக்கு மட்டும் பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. ஒருவருக்கு இன்னும் பட்டுவாடா செய்யப்படவில்லை. ஆனால் இங்கே அமைச்சரவர்கள் எல்லோருக்கும் பட்டுவாடா செய்ததாகச் சொல்லுகிறார்கள். இது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. எனவே மீண்டும் விவரங்களைப் பார்த்துச் சொல்லும்படி அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, என்னிடம் இருக்கும் குறிப்புகளில் நிலச் சொந்தக்காரர்கள் 5 பேர்கள் என்றுதான் இருக்கிறது. அவர்களுக்கு, குறிப்பிட்டுள்ள தொகையை அரசின் மூலமாகப் பிரித்துக் கொடுத்திருக்கிறோம். இப்போது மாண்புமிகு உறுப்பினரவர்கள் 6 பேர்கள் நிலச் சொந்தக்காரர்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் குறிப்பிலே பார்க்கும்போது, 5 பேர்கள்தான் நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் என்ற விவரம் இருக்கிறது. எனவே 6 பேர்கள் நிலச் சொந்தக்காரர்களாக இருந்தால், அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர்வர்களே, 6 பேர்கள் என்று தனித் தாசில்தார் பிறப்பித்த உத்தரவில் இருக்கிறது. அதனுடைய நகல் என்னிடத்தில் இருக்கிறது. அந்த 6 பேர்களில் 5 பேர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. மற்றொருவர் பல முறை விண்ணப்பித்தும், நேரடியாகப் போய் சொல்லியும், தனித் தாசில்தார் திரு. கருவேல முத்து என்பவர், அவருக்குப் பணம் தரவில்லை. இவர் ஒரு ரிடையர்ட் ஆசிரியர். இவரை மிரட்டி அனுப்பியிருக்கிறார்கள். அவருக்கு இன்னும் பணம் தரவில்லை. அங்கே 6 பேர்களிடம் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. இவருக்கு 25,000 ரூபாய்—நிலத்திலுள்ள பனை மரம், 9 சென்ட் நிலம்—வர வேண்டும். இன்னும் அவர்கள் கோரிக் கொண்டிருக்கிறார்கள். அரசுக்கு விண்ணப்பிக்கிறார்கள். இதுவரை தரவில்லை. எனவே இப்படி தவறான தகவல்களைத் தரும் அரசு அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன். இதுவரை பணப் பட்டுவாடா செய்யாத அந்த ஏழைக்கு அந்தப் பணம் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: நிலத்திற்குச் சொந்தக்காரராக அவர் இருக்கும்போது, அவருக்குத் தர முடியாது என்று சொல்லுவது எந்த விதத்திலும் நியாயமல்ல. அதிகாரிகள் தவறான தகவல்கள் தந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். உறுப்பினரவர்கள் சொன்னதுபோல், அந்தப் பெண்மணி நிலச் சொந்தக்காரராக இருந்தால், அதை ஆராய்ந்து பார்த்து, நடவடிக்கை எடுத்து, அவருக்குச் சேர வேண்டிய தொகையைக் கொடுக்க, அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்த ஆண்டு நிலவரப்படி, ஈட்டுத் தொகை தரப்படவில்லை. மற்றவர்களுக்குக் கூட அப்படித் தரப்படவில்லை. இப்போதுள்ள நிலவரப்படி ஈட்டுத் தொகை தரப்படுகிறது. அது மிகவும் நஷ்டத்தை அவர்களுக்கு ஏற்படுத்துகிறது. எனவே ஆர்ஜிதம் செய்த ஆண்டு என்ன மார்க்கெட் ரேட்டோ, அந்த அடிப்படையில் ஈட்டுத் தொகையை அவர்களுக்கு அரசு தருமா? அங்கேயுள்ளவர்கள் தந்துள்ள கோரிக்கையின் அடிப்படையில்தான் இதைச் சொல்கிறேன். அது பரிசீலிக்கப்படுமா? அதிகத் தொகையாக இருந்தால், அது அவர்களுக்குக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: அதை அரசு பரிசீலிக்கும்.

1984 மார்ச் 26]

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, அரசு நிலத்தைக் கையகப் படுத்துகிறபோது, நிலச் சொந்தக்காரர்கள் 6 பேர்கள் என்று தாசில்தார் அறிவித்ததாக ஆணை எண்ணோடு மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஐந்து பேருக்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஒருவருக்குக் கொடுக்கவில்லை என்று குற்றம் சாட்டுகிறார்கள். அவர் ஈட்டுத் தொகையைக் கூட்டிக் கேட்டிருந்தால், அந்தப் பணத்தை அப்படியே வைத்துக்கொண்டு, அவருக்குக் கோர்ட் மூலம் தாக்கீது அனுப்பி, அவர் கோரிக்கையைக் கேட்டு, நடவடிக்கை எடுக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். இதில் ஏதாவது தவறு செய்திருந்தால், தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதோடு, உரிமை உடையவர்களுக்குப் பணம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: என்னிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில், குறிப்பிட்ட நிலங்களைப் பொறுத்தவரையில், அவை ஐந்து பேருக்குச் சொந்தம் என்று இருக்கிறது. ஆனால் உறுப்பினர் பேசுகிறபோது, தனித் தாசில்தார் கொடுத்திருக்கிற தகவலின் அடிப்படையில் அது ஆறு பேருக்குச் சொந்தமானது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஆறு பேருக்குச் சொந்தமானதை ஐந்து பேருக்கு மட்டும் கொடுத்திருந்தால், அது நியாயமில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆராய்ந்து பார்த்து தவறான தகவல் கொடுத்திருந்தால், அப்படித் தவறான தகவல்கள் கொடுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்து நியாயம் கிடைக்க வேண்டிய அந்த ஆறாவது நபருக்கு நியாயம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

2. கவன ஈர்ப்பு

(1) அனல் மின் நிலையங்களுக்குத் தேவைப்படும் நிலக்கரிப் பற்றாக்குறை காரணமாக பொருளாதார நிலை பாதித்துள்ளது குறித்து.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"இம் மாநிலத்திலுள்ள அனல் மின் நிலையங்களுக்குத் தேவைப்படுகிற நிலக்கரி அதிக அளவில் பற்றாக்குறையாக இருப்பது குறித்தும், அதன்